# இலங்கையின் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான நிகழ்ச்சியை ஒளிபரப்பவிருக்கிறது சனல் – 4

**இலங்கையில் கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுவெடிப்புகள் குறித்த சிறப்பு நேர்காணலுடனான நிகழ்ச்சியை வெளியிட பிரித்தானியாவின் சனல் 4 தயாராகி வருகிறது எனத் தகவல் வெளியாகியுள்ளது.**

**அதன்படி, செப்டம்பர் ஐந்தாம் திகதி பிரித்தானிய நேரப்படி 11.05 க்கு இந்த நிகழ்ச்சி ஒளிபரப்பப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**இது முன்னதாக ஓகஸ்ட் 15 ஆம் திகதி வெளியிடுவதற்கு திட்டமிடப் பட்டிருந்தது. எனினும், சில தொழில்நுட்பக் கோளாறுகள் காரணமாக திகதி ஒத்திவைக்கப்பட்டது.**

**"Sri Lanka's Easter Bombings – Dispatches" என்ற தலைப்பில் இந்த நிகழ்ச்சி ஒளிபரப்பப்படவிருக்கிறது. தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் ஊடகச் செயலாளராக இருந்த ஆசாத் மௌலானாவும், கோட்டபாயவுக்கு நெருங்கிய இராணுவ அதிகாரிளும் சம்பந்தப்பட்ட பல முக்கிய தீவிரமான வெளிப்பாடுகள் இந்த நிகழ்ச்சியில் ஒளிபரப்பாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

2 ➤




மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 16 திங்கட்கிழமை 04.09.2023 கதிர் 64



யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்


## கோட்டாவை அரியணை ஏற்றவே உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு

*சர்வதேச ஊடகங்கள் செய்தி*

இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுவெடிப்புக்கு ராஜபக்ச குடும்பத்துக்கு விசுவாசமான இலங்கை அதிகாரிகள் உடந்தையாக இருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இங்கிலாந்தின் சனல் - 4 இல் நாளை ஒளிபரப்பப்படவுள்ள நேர்காணல் ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது எனச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ராஜபக்சக்களை மீண்டும் அதிகாரத்தில் அமர்த்துவதற்காக இராணுவ உளவுத்துறை அதிகாரியான சுரேஷ் சாலி மற்றும் இஸ்லாமிய அரசுடன் இணைந்த நபர்களுடன் ஒரு சதித் திட்டம் தீட்டுவதற்காக 2018 இல் ஒரு சந்திப்பு இடம்பெற்றது எனவும் அந்த நேர்காணலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இந்தச் சந்திப்பு இடம்பெற்றதுடன் சுரேஷ் சாலி என்னிடம் வந்து ராஜபக்சக்களுக்குத் தேவை

2 ➤

## நாளை கூடுகின்றது நாடாளுமன்றம் அரசியல் களத்தில் பற்றிய பரபரப்பு!

நாடாளுமன்றம் நாளை முற்பகல் 9.30 க்குச் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடவுள்ளது.

செப்டெம்பர் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 5 மணி வரை ஆயுள்வேதம் (திருத்தச்) சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு விவாதம் நடைபெறவுள்ளது.

அதன் பின்னர் தனிநபர் சட்டமூலங்களான ஸ்ரீ பாலபிவூர்தி வர்தன சமிதிய (கூட்டிணைத்தல்) சட்டமூலம், சமாதி சமூக அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் என்பன தொடர்பான இரண்டாவது மதிப்பீடு இடம்பெறும். இதனைத் தொடர்ந்து பி.ப. 5 மணி முதல் பி.ப. 5.30 வரை அரசாங்கத்தினால் கொண்டுவரப்படும் ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை விவாதிக்கப்படவுள்ளது.

செப்டெம்பர் 6ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10.30 மணிக்கு அந்நியச் செலாவணிச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2338/40 ஆம் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மற்றும் இறக்குமதி

2 ➤

## புதிய இராணுவத் தளபதியாக சஞ்சய் வனசிங்கவுக்கு வாய்ப்பு



இலங்கை இராணுவத்தின் 25ஆவது இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சஞ்சய் வனசிங்க நியமிக்கப்பட வாய்ப்புள்ளதாக அரசாங்கத்தின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விகும் லியனகேவின் சேவை நீடிப்பு டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளதுடன், அதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் மேஜர் ஜெனரல் சஞ்சய் வனசிங்க ஒக்டோபர் 13ஆம் திகதி ஓய்வுபெறவுள்ளார்.

மேஜர் ஜெனரல் சஞ்சய் வனசிங்கவின் சேவையை நீடிக்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தீர்மானித்துள்ளதாகவும், விக்கும் லியனகேவிற்குப் பின்னர் அவரை இராணுவத் தளபதியாக்கவும் ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாகவும் அரசாங்கத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

அவர் மீது ஊழல் நடவடிக்கை தொடர்பான புகார்கள் இல்லாததும், தனது சேவைக் காலத்தில் ஒழுக்க மீறல்களில் ஈடுபடாததும்

2 ➤

## லிட்ரோ எரிவாயுவின் விலை அதிகரிக்கிறது

லிட்ரோ எரிவாயு நிறுவனம் எரிவாயு விலை உயர்வு தொடர்பான தகவலை இன்று வெளியிட்டுள்ளது.

விலைத் திருத்தங்கள் இன்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் என இன்று முற்பகல் இடம்பெற்ற விசேட ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார்.

அதன்படி 12.5 கிலோ சிலிண்டரின் விலை 145 ரூபாய் அதிகரித்து புதிய விலை 3,127 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

5 கிலோ சிலிண்டரின் விலை 58 ரூபாய் அதிகரித்து புதிய விலை 1,256 ரூபாயாகவும், 2.3 கிலோ சிலிண்டர் 26 ரூபாய் அதிகரித்து புதிய விலை 587 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. (க)

## 2022/2023 உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகின

2022/2023 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் தற்போது வெளியாகியுள்ளன.

பரீட்சை திணைக்களத்தின் https://www.doenets.lk/ என்ற இணையதளத்தின் ஊடாக பெறுபேறுகளை அறிந்து கொள்ள முடியும் என பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது. (04)

## இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறல் படகில் தமிழகம் சென்று பேசுவதற்கு முடிவு!

இந்திய கடற்றொழிலாளர்களின் அத்துமீறலை கண்டித்து இந்தியாவுக்கு படகு மூலம் சென்று பேச்சுவார்த்தையில் ஈடுபடப்போவதாக யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தினர் அறிவித்துள்ளனர்.

யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தில் இன்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இது குறித்து சம்மேளனத்தின் தலைவர் புனித பிரகாஸ், கருத்துத் தெரிவிக்கையில், கடந்த முதலாம் திகதி இந்திய கடற்றொழிலாளர்களது அத்துமீறலைக் கண்டித்து ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரிடம் மகஜரொன்றைக் கையளித்தோம்.

குறித்த மகஜர் கையளித்து 14 நாட்களுக்குள் இந்தியக் கடற்றொழிலாளர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாவிடில், வடபகுதி மீனவர்கள் 14 பேர் கடல் வழியாகப் படகு மூலம் தமிழகம் சென்று, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், தமிழக எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி, தமிழக ஆளுநர் ரவி, தமிழக பா.ஜ.க தலைவர் கு.அண்ணாமலை ஆகியோரைச் சந்தித்துப் பேசத் தீர்மானித்துள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

# 2023 A/L பரீட்சையை ஒத்திவைக்கவேண்டும்!

## சஜித் பிரேமதாஸ

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள 2023 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையை பிற்போடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார்.

இவ்வருடம் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் உரிமைகளையும் நடைமுறைச் சூழலையும் புறக்கணிக்கும் வகையில் பரீட்சை திணைக்களம் செயற்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2022 உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்படாத நிலையில், 2023ஆம் ஆண்டுக்கான பரீட்சை நவம்பரில் நடத்தப்பட்டால், மாணவர்கள் பாரிய அநீதிக்கு ஆளாக நேரிடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நவம்பர் மாதத்தில் பரீட்சையைத் திட்டமிடுவதால், இரண்டாவது தடவையாக பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்கள் பரீட்சைக்குத் தயாராவதற்கு



இரண்டு மாதங்களுக்கும் குறைவான கால அவகாசமே கிடைக்கும் எனவும் சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார். (04)

## “புஷ்பக 27” திரைப்படம் அரங்கு நிறைந்த வெற்றி!




ஈழத்தில் தயாரிக்கப்பட்ட தமிழரின் தொன்மையைத் தேடிச் செல்லும் முதல் விண்வெளித்திரைப்படமான “புஷ்பக 27” யாழ்ப்பாணத்தில் திரையங்கு நிறைந்ததாக மூன்று காட்சிகள் திரையிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ராஜா திரையரங்கில், நேற்று முன்தினம் சனிக்கிழமை மற்றும் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்களும் மூன்று காட்சிகள் சிறப்புக் காட்சிகளாக இத்திரைப்படம் திரையிடப்பட்டது.

எதிர்வரும் காலங்களில் இலங்கையின் ஏனைய இடங்களில் உள்ள திரையரங்குகளிலும் வெளிநாடுகளிலும் திரையிட நடவடிக்கை எடுத்துள்ளதாக படக்குழுவினர் அறிவித்துள்ளனர்.

சத்தியா மென்டிசின் திரைக்கதையில், காரை சிவநேசனின் இயக்கத்தில் இத்திரைப்படம் உருவாக்கியுள்ளது. (01)

## ஞானசார தேர் உள்ளிட்ட எழுவருக்கு எதிரான வழக்கு விசாரணை 11 இல்!

பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் உள்ளிட்ட 7 பேருக்கு எதிரான வழக்கை எதிர்வரும் 11ஆம் திகதி மீள அழைக்குமாறு கோட்டை நீதவான் திலின கமகே இன்று உத்தரவிட்டுள்ளார்.

புனித குர்ஆன் தொடர்பான தவறான மற்றும் போலியான அறிக்கைகளை ஊடகங்களுக்கு வெளியிட்டமை தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்கள் கிடைக்கவில்லையென காவல்துறையினரால் நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில், பிணையில் விடுதலையாகியுள்ள பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் உள்ளிட்ட பிரதிவாதிகள் குழு இன்று நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தது. (க)

## புதிய இராணுவத் தளபதியாக .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

சஞ்சய் வனசிங்க, தற்போது இராணுவத்தின் தலைமை அதிகாரியாகவும் செயல்பட்டு வருகிறார்.

மேஜர் ஜெனரால் சஞ்சய் வனசிங்க, இராணுவத்தின் இருபத்தி ஏழாவது படைப் பிரிவின் பிரதானிப் பாடநெறியில் மூன்றாம் இடத்தைப் பெற்றவராவார்.

இலங்கை இராணுவத்தின் பீரங்கிப் படையைச் சேர்ந்த அதிகாரியான இவர், பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்தபோது, மறைந்திருந்து தாக்குதல்களை நடத்தும் பிரிவின் தளபதியாகவும் பணியாற்றினார்.

இலங்கை இராணுவத்தில் அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்ற பின்னர், அவர் இங்கிலாந்தில் உள்ள சாண்டர்ஸ்வித் இராணுவ அறிவியல் கல்லூரியில் தனது உயர் படிப்பபையும் நிறைவுசெய்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாச ஜனாதிபதியாகப் பதவி வகித்த தருணத்தில் இலங்கைக்கும் பிரித்தானியாவுக்கும் இடையில் பெரும் நெருக்கடி ஏற்பட்டது.

இலங்கைக்கும் பிரித்தானியாவுக்கும் இடையிலான நல்லுறவு சீர்குலைவதற்கு காரணமான இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகராக இருந்த டேவிட் கிளாஸ்டனை நாடு கடத்துமாறு ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச உத்தரவிட்டார்.

அந்த நிலைமையினால்,லெப்டினன்ட் வனசிங்கவும் இலங்கைக்குத் திரும்ப நேரிட்டிருந்தது.

மேஜர் ஜெனரால் சஞ்சய் வனசிங்க கொழும்பு ஆனந்தாக் கல்லூரியின் பழைய மாணவர் என்பதுடன், இவர் முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரால் ஹமில்டன் வனசிங்கவின் மூத்த மகனும் ஆவார்.

சஞ்சய் வனசிங்க இராணுவத் தளபதியானால் அது உலக சாதனையாக அமையும் என இராணுவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். இதற்குக் காரணம், தந்தையும், மகனும் இதுவரை எந்தவொரு நாட்டிலும் இராணுவத் தளபதி பதவியை வகிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## நாளை கூடுகின்றது ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2341/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதி என்பன விவாதம் இன்றி அங்கீகரிக்கப்படவுள்ளன.

அதனைத் தொடர்ந்து பி.ப. 5.30 மணி வரை சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு அமைய விவாதம் இடம்பெறவுள்ளது.

செப்டெம்பர் 7ஆம் திகதி வியாழக்கிழமை மற்றும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய இரண்டு தினங்களும் மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 5.30 மணிவரை இந்த விவாதத்தைத் தொடர்வதற்கும் தீர்மானிக்கப்பட்டதுடன், 8ஆம் திகதி 5.30 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. (03)

## கோட்டாவை அரியணை ஏற்றவே .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் பாதுகாப்பற்ற சூழல். அப்போதுதான் கோட்டாபய ராஜபக்சவை ஜனாதிபதியாவதற்கு ஒரே வழி” - எனக் கூறியதாக ஹன்சீர் ஆசாத் மௌலானா தெரிவித்துள்ளார்.

”தாக்குதல் திட்டம் என்பது ஓரிரு நாட்களில் செய்யப்பட்ட திட்டம் அல்ல. அது இரண்டு, மூன்று ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெற்று ஆறு மாதங்களுக்குப் பின்னர் பாதுகாப்பை மீட்டெடுப்பதாக வாக்குறுதி அளித்ததன் பேரில் கோட்டாபய ராஜபக்ச ஆட்சியைப் பிடித்தபோது சுரேஷ் சாலி இராணுவப் புலனாய்வுத் தலைவராக பதவி உயர்வு பெற்றார்” - என்றும் ஆசாத் மௌலானா மேலும் குறிப்பிட்டுள்ளார், என்றும் அந்த ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (03)

## இலங்கையின் ஈஸ்டர் தாக்குதல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டமா அதிபர் மற்றும் அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலி உட்பட பல அரசாங்க அதிகாரிகளுக்கு எதிராக இந்த ஆவணப்படத்தில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க)

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்



# கால் நடை அறுப்பு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு



(நூருல் ஹுதா உமர், நிப்றாஸ் மன்சூர்)

உண்ணுவதற்கு ஆகுமான பிராணிகளை அறுப்பது தொடர்பான மார்க்க சட்டவிதிகளும் ஜீவகாருண்யமும் எனும் தொனிப் பொருளிலான விழிப்புணர்வுக் கருத்தரங்கு கல்முனை அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத் உலமா சபையின் ஏற்பாட்டில் கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் சனிக்கிழமை நடைபெற்றது.

கல்முனை அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத் உலமா சபையின் தலைவர் மௌலவி அல் ஹாஜ் பி.எம்.ஏ ஜலீல் (பாக்கவி) தலைமையில் நடைபெற்ற இவ் விழிப்புணர்வுக் கருத்தரங்கில் உலமாக்கள், கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் மற்றும் கல்முனை கடற்கரை பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகை தர்ஹா ஷரீப், நிர்வாக சபையின் தலைவர் டாக்டர் அல்ஹாஜ் எஸ்.எம்.ஏ அஸீஸ், சுகாதார பரிசோதகர்கள், கிராம சேவை அதிகாரிகள், கல்முனை, சாய்ந்தமருது, நற்பட்டிமுனை, மருதமுனை பிரதேசங்களிலிருந்து வருகைதந்த பிராணிகளை அறுப்பவர்கள் மற்றும் ஆடு, மாடு, கோழி இறைச்சி போன்றவற்ற விற்பனை செய்துவரும் வியாபாரிகள் உற்பட பொதுமக்களும் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

இவ்விழிப்புணர்வுக் கருத்தரங்கின் இறுதி நிகழ்வாக கல்முனை அஹ்லுஸ்ஸுன்னா வல்ஜமாஅத் உலமா சபையின் செயலாளர் ஏ.எல். நாஸர் மன்பயின் நன்றியுரையும் இடம்பெற்றது.

# 765 கிராம் கஞ்சாவுடன் யாழில் ஒருவர் நேற்றிரவு கைதானார்!



யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் நேற்று இரவு ஒரு தொகைக் கஞ்சாவுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டார்.

மண்டைதீவுப் பகுதியைச் சேர்ந்த 32 வயதான அந்த நபரைக் கைது செய்யும் நடவடிக்கையை, யாழ்ப்பாணப் பிராந்திய சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கமைய, யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையப் போதைப்பொருள் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி எஸ்.எஸ்.சுபசிங்க தலைமையிலான குழு கைது முன்னெடுத்திருந்தது.

கைது நடவடிக்கையின் போது 765 கிராம் கஞ்சாவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (01)

# கல்முனையில் நடைபெற்ற மாவட்ட ஆங்கில மொழித்தினப் போட்டிகள்

(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனைக் கல்வி மாவட்ட மட்ட ஆங்கில மொழி மற்றும் நாடகப் போட்டிகள் கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியில் நேற்று நடைபெற்றன.

கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில், கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்ச்சிகளில்

திருக்கோவில், சம்மாந்துறை, கல்முனை, அக்கரைப்பற்று ஆகிய நான்கு கல்வி வலயங்களைச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்றினர்.

மாவட்ட மட்டப்போட்டிகளின் துவக்க நிகழ்வில் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வைபவரீதியாக தொடங்கி வைத்தார்.

இங்கு வெற்றிபெற்ற மாணவர்களுக்கு கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் அகிலா கனகசூரியம், கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.எஸ். நஜீம் உட்பட கல்விப் பணிப்பாளர்கள் சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கிக் கௌரவித்தனர்.



இந்த நிகழ்வில் வலய பிரதி, உதவி கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# பொலிஸ் மேலதிகாரிகளினால் கீழ்நிலை அதிகாரிகளுக்கு அநீதி

## வர்த்தமானி அறிவிப்பு வெளியீடு

பொலிஸ் மேலதிகாரிகளினால் கீழ்நிலை அதிகாரிகளுக்கு ஏற்படுகின்ற அநீதிகள் மற்றும் பழிவாங்கல்கள் குறித்து விசாரிப்பதற்கான அதிகாரம் தேசிய பொலிஸ் ஆணைகுழுவிற்கு வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு கடந்த ஒகஸ்ட் 16 ஆம் திகதி வெளியிடப்பட்டதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.


உரிய வர்த்தமானி அறிவித்தல் இலக்கம் 2345/45 இன் பிரகாரம், இனிமேல் பொலிஸ் திணைக்களத்தில் இடம்பெறும் பழிவாங்கல்கள் மற்றும் அநீதிகளை 6 மாதங்களுக்குள் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு சத்தியக் கடதாசி மூலம் அனுப்ப முடியும். 6 மாதங்களுக்குள் அனுப்ப முடியாவிட்டால் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களைக் குறிப்பிடல் வேண்டும்.

பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு ஏற்கனவே அனுப்பப்பட்ட முறைப்பாடுகள் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கும் அனுப்பப்பட்டுள்ளதாகவும், அந்த முறைப்பாடுகள் எதிர்காலத்தில் விசாரிக்கப்படும் எனவும் தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவ்வாறான முறைப்பாடுகளுடன் கூடிய அதிகளவான கோப்புகள் தமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளதாக பொலிஸ் ஆணைக்குழுவின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (ரெ-05)



# நோபல் பரிசளிப்பு விழாவில் பங்கேற்க ரஷ்யா, பெலாரஸ், ஈரானுக்கு அழைப்பு அனுப்பப்படாது என அறிவிக்கப்பட்டது



கடந்த ஆண்டு நடைபெற்ற நோபல் பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்வதற்கு ரஷ்யா, பெலரஸ் ஆகிய நாடுகளின் தூதர்களுக்கு நோபல் அறக்கட்டளை அழைப்பு விடுக்கவில்லை. உக்ரைன் மீதான படையெடுப்புக் காரணமாக, ரஷ்யா மற்றும் அதன் கூட்டணி நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என நோபல் அறக்கட்டளை தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் ஒகஸ்ட் 31 ஆம் திகதி நோபல் அறக்கட்டளை சார்பில் வெளியிடப்பட்ட அறிவிப்பில், கடந்த ஆண்டு புறக்கணிக்கப்பட்ட நாடுகளின் தூதர்கள் இந்த ஆண்டு அழைக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த அறிவிப்புக்கு சுவீடன் நாட்டைச் சேர்ந்த பல்வேறு அரசியல் கட்சிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன.

அத்தோடு, சுவீடன் தலைநகர் ஸ்டொக்ஹோமில் நடைபெறவுள்ள நோபல் பரிசளிப்பு விழாவைப் புறக்கணிக்கவுள்ளதாக அங்குள்ள அரசியல் கட்சிகளும் அறிவித்தன.

இதனையடுத்து ரஷ்யா, ஈரான் மற்றும் பெலாரஸ் ஆகிய நாடுகளின் தூதர்களுக்கு நோபல் பரிசளிப்பு விழாவில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்படாது, என நோபல் அறக்கட்டளை அறிவித்துள்ளது. (04)

# பாகிஸ்தானில் கல்லால் அடித்து பெண் கொலை



பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் திருமணம் தாண்டிய உறவில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டி பெண் ஒருவர், அவரது கணவர் மற்றும் கணவரின் இரு சகோதரர்களால் கல்லெறிந்து கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

லாகூரிலிருந்து 500 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள பஞ்சாப் மாகாணத்தின் ராஜன்பூர் மாவட்டத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

அல்கானி பழங்குடிச் சமூகத்தைச் சேர்ந்த 20 வயதுடைய அந்தப் பெண், திருமணம் தாண்டிய உறவில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டி, அவரது கணவர் மற்றும் கணவரின் இருவரது சகோதரர்களால் கல்லால் அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார்.

கொல்லப்படுவதற்கு முன்பு அப்பெண்ணை மரத்தில் கட்டிவைத்து கொடுமைப்படுத்தியதும் பொலிசாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்தக் குற்றச் சம்பவத்துக்குப் பின்னதாக தப்பியோடிய மூவரையும் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் ஆண்டுதோறும் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்கள் ஆணவக் கொலை செய்யப்படுவதாக மனித உரிமை ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். (04)

# மறைந்த பிரிட்டன் அரசி எலிசபெத்துக்கான நிரந்தர நினைவிடம் 2026 இல் திறக்கப்படும்



மறைந்த பிரிட்டன் அரசி இரண்டாம் எலிசபெத்தின் நிரந்தர நினைவிடம் அவரது நூறாவது பிறந்த தினத்தையொட்டி, 2026 இல் திறக்கப்படும் என அந்த நாட்டு அரசு நேற்று அறிவித்துள்ளது.

நினைவிடம் அமைப்பதற்கான திட்டத்தை வகுக்க, அரசி எலிசபெத்தின் முன்னாள் தனிச் செயலர் பிரபு ராபின் ஜான்வீரின் தலைமையிலான குழுவையும் பிரிட்டன் அரசு அமைத்துள்ளது.

பிரிட்டனை 70 ஆண்டு காலம் ஆட்சிபுரிந்த அரசி இரண்டாம் எலிசபெத், கடந்த ஆண்டு செப்டம்பர் 8 இல் தனது 96 ஆவது வயதில் காலமானார். இதைத் தொடர்ந்து, பிரிட்டனில் உள்ள விண்ட்ஸர் கோட்டையில் உள்ள புனித ஜார்ஜ் தேவாலயத்தில் அவரது உடல் அரச முறைப்படி அடக்கம் செய்யப்பட்டது.

அவரது முதலாமாண்டு நினைவு தினத்தையொட்டி, பிரபு ராபின் ஜான்விரின் தலைமையிலான அரசி எலிசபெத் நினைவிடக் குழுவை அந்த நாட்டின் மத்திய அமைச்சரவை அமைத்துள்ளது. அரசிக்காக நிரந்தர நினைவிடம் ஒன்றை அமைப்பது குறித்தும், ஆட்சிக் காலத்தில் அவர் ஆற்றிய சேவைகளை பிரிட்டன் மக்களுக்கு நினைவூட்டும் வகையிலான திட்டத்தை வகுப்பது தொடர்பாகவும் இந்தக் குழு பரிந்துரைகளை அளிக்கும். இதைத் தொடர்ந்து, அந்தத் திட்டத்துக்குத் தேவையான நிதி உதவிகளை அரசு வழங்கும் என அந்த நாட்டின் மத்திய அமைச்சரவை அலுவலகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பிரிட்டனின் துணைப் பிரதமர் ஆலிவர் டௌடன் கூறுகையில், ‘அரசி இரண்டாம் எலிசபெத் பிரிட்டனில் நீண்ட காலம் அரசாட்சி புரிந்தவர். மக்களுக்குத் தனது சேவையை மிகப் பெருமளவில் வழங்கினார். எங்களுடைய நாட்டுக்கும் பொதுநலவாய நாடுகளுக்கும் அவர் ஆற்றிய சேவைக்கு மரியாதை செலுத்துவதற்கான திட்டத்தை வகுக்கும் முக்கியமான பணியை பிரபு ஜான்விரின் தொடங்க உள்ளார், என்று குறிப்பிட்டுள்ளார். (04)

# பிரித்தானியாவில் ஒன்றரை லட்சம் மருத்துவர்களுக்கு சம்பள உயர்வு




பிரித்தானியாவில் உள்ள இளநிலை மருத்துவர்கள் தங்களுக்கு 35 சதவீதம் சம்பள உயர்வு வழங்க வேண்டும், எனக் கோரிக்கையை முன்வைத்து அரசாங்கத்திடம் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர். அதில் உடன்பாடு எட்டப்படாததால் அவர்கள் கடந்த பல மாதங்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதே கோரிக்கையை வலியுறுத்தி புகையிரத, விமானப் போக்குவரத்து உள்பட பல்வேறு துறையினரும் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர். ஆனால், போராட்டத்தில் ஈடுபடும்போது பேச்சுவார்த்தை நடத்துவதில்லை என்ற கொள்கையில் அரசாங்கம் உறுதியாக உள்ளது.

கொரோனாத் தொற்று, உக்ரைன் போர், பிரெக்சிட் அமைப்பில் இருந்து வெளியேற்றம் போன்றவற்றால் ஏற்கனவே பிரித்தானியாவின் பொருளாதாரம் அதல பாதாளத்தில் வீழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் 35 சதவீத சம்பள உயர்வை வழங்கினால், அது பணவீக்கத்தை இன்னும் அதிகரித்து விடும். இதனால், ஏழைகள் பெரும் இன்னலுக்குள்ளாக நேரிடும் என பொருளாதார நிபுணர்கள் எச்சரித்திருந்தனர்.

எனினும், பிரித்தானியா முழுவதும் உள்ள இளநிலை மருத்துவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருவதால் அங்கு நோயாளிகளின் காத்திருப்புப் பட்டியல் நீண்டுள்ளது. இதனால், நோயாளிகள் சிகிச்சை பெற முடியாமல் அவதிப்பட்டு வந்தனர். இந்த நிலையில், தற்போது முதலாம் ஆண்டுப் பயிற்சி மருத்துவர்களுக்கு 10.3 சதவீதமும், இளநிலை மருத்துவர்களுக்கு 8.8 சதவீதமும், மருத்துவ ஆலோசகர்களுக்கு 6 சதவீதமும் சம்பள உயர்வு வழங்கப்படும், என அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதன்மூலம், அவர்களுக்குக் கணிசமாகச் சம்பளம் உயர்வதோடு பணவீக்கமும் ஓரளவு கட்டுப்பாட்டில் இருக்கும் எனவும் கருதப்படுகிறது. அரசின் இந்த அறிவிப்பால் நாடு முழுவதும் உள்ள சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் இளநிலை மருத்துவர்கள் பயன்பெறுவார்கள் என பிரித்தானிய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. (04)

# சனாதனத்திற்கு எதிராகப் பேசுவது தொடரும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு!



சனாதனத்திற்கு எதிராகப் பேசுவதை நிறுத்தப் போவதில்லை, என்று தமிழக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற 94 ஆவது அகில் இந்திய எம்சிசி முருகப்பா தங்கக்கிண்ண ஹொக்கி இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு அமைச்சர் உதயநிதி பதக்கங்களை வழங்கினார்.

பரிசளிப்பு நிகழ்ச்சிக்குப் பின்னர் பேட்டி அளித்த அவர், சனாதனம் குறித்து தான் பேசிய பேச்சால் தற்போது அதுபற்றி இந்தியாவே பேசிக்கொண்டு இருக்கிறது, என்று தெரிவித்தார். தமது பேச்சால் நிறையப் பேருக்கு வயிற்றெரிச்சல் ஏற்பட்டுள்ளது என்று கூறிய அமைச்சர் உதயநிதி, தான் இந்துக்களை இனப்படுகொலை செய்யவேண்டும் என்று கூறியதாக பா.ஜ.க.வினர் இட்டுக்கட்டிப் பரப்புகின்றனர் என்றும் சாடினார்.

இந்தியா என்ற கூட்டணியின் மும்பைக் கூட்டம் வெற்றி அடைந்துள்ளதால் அதைத் திசை திருப்பவே பா.ஜ.க.வினர் இது போன்ற பொய்களைப் பரப்புவதாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் விமர்சனம் செய்துள்ளார்.

சனாதனம் என்றால் என்ன? சனாதனம் என்பது சமூகத்தில் எதுவுமே மாறாமல் எல்லாமே அப்படியே இருக்க வேண்டும் என்றும் அதுவும் நிரந்தரமாக எனவும் வலியுறுத்துகிறது. மாறாக திராவிட மொடல் என்பது மாற்றத்தையும், சமூகச் சமத்துவத்தையும் வளர்க்கிறது.

நான் சனாதன தர்மத்தைத்தான் எதிர்த்தேன். அதை ஒழிக்க வேண்டும் என்றுதான் கூறினேன். பா.ஜ.க. எனது கருத்தைத் திரித்து, போலிச் செய்திகளைப் பரப்புகிறது. அவர்கள் என்ன மாதிரியான வழக்குகள் தொடுத்தாலும் நான் அத்தனையையும் சந்திக்கத் தயாராக இருக்கிறேன்,என்றும் அமைச்சர் உதயநிதி தெரிவித்திருக்கிறார். (04)

# இலங்கைக் குற்றவாளிகளுக்கு இன்டர்போல் சிவப்பு அறிவிப்பு

இலங்கையில், கொலை உட்பட பல்வேறு குற்றங்களைச் செய்து நாட்டை விட்டுத் தப்பிச் சென்ற 148 பாதாள உலகக் குற்றவாளிகளை கைது செய்வதற்கு இன்டர்போல் சிவப்பு அறிவித்தலை விடுத்துள்ளது.

திறந்த மற்றும் பொறுப்பான அரசாங்கத்திற்கான நாடாளுமன்ற துறைசார் கண்காணிப்புக் குழுக் கூட்டம், நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார சுமித்ராராச்சி தலைமையில் நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் இன்று இடம்பெற்றது.

அதன் போது, திறந்த மற்றும் பொறுப்பான அரசாங்கத்திற்கான துறைசார் கண்காணிப்புக்கான நாடாளுமன்ற குழுவின் குற்றவியல் மற்றும் சட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அசங்க கரவிட்ட இதனைத் தெரிவித்துள்ளார்.

சந்தேக நபர்கள் வேறு நாடுகளுக்கு தப்பிச் செல்வதை தடுக்கும் வகையில் நாட்டை விட்டு வெளியேறிய குற்றவாளிகளை கைது செய்யுமாறு இலங்கை பொலிஸாரினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய சர்வதேச பொலிஸார் இந்த சிவப்பு அறிவித்தல்களை பிறப்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சந்தேக நபர்களில் சிலர் ஏற்கனவே இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளதாகவும் இந்தியாவில் 12 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு அந்நாட்டில் வழக்குத் தொடரப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, மரண தண்டனைக்குரிய குற்றங்களைச் செய்த சந்தேக நபர்களை இலங்கைக்கு அழைத்து வருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும், பல நாடுகள் மரண தண்டனையை நிராகரிப்பதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக மரணதண்டனை விதிக்கக்கூடிய குற்றங்களுடன் தொடர்புடைய ஐந்து சந்தேக நபர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு சர்வதேச பொலிஸார் சிவப்பு அறிவித்தலை வழங்க மறுத்ததாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அசங்க கரவிட்ட குறிப்பிட்டுள்ளார். (க)

## எரிபொருளுக்கான க்யூஆர் முறை நீக்கப்பட்டாலும் புதிய வழிமுறையொன்று நடைமுறைக்கு வருமாம்!

### எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தகவல்



எரிபொருள் பெறுவதற்கான க்யூஆர் முறை நிறுத்தப்பட்டுள்ள போதிலும் அதற்கு மாற்றீடாக எரிபொருள் இருப்பு, கோரல்கள், விநியோகம் உட்பட இன்னும் பல விபரங்களை பெறக்கூடிய வகையிலான புதியதொரு வழிமுறையொன்று அமைக்கப்படும் என மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

எரிபொருள் ஒதுக்கீடு முறை கடந்த வெள்ளிக்கிழமை முதல் நிறுத்தப்பட்டுள்ளது. தற்போது, நாட்டின் நுகர்வுக்கு போதுமான அளவில் எரிபொருள் இருப்பு உள்ளதையும், சீன சினோபெக் நிறுவனம் இலங்கையில் எரிபொருள் வர்த்தகத்தில் இணைந்திருப்பதையும் கவனத்திற் கொண்டே மேற்படி எண்ணெய் எரிபொருள் ஒதுக்கீடு அமைப்பு நிறுத்தப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

அடுத்த சில மாதங்களில் ஆர்.எம். பார்க் மற்றும் ஷெல் நிறுவனங்களும் இலங்கையில் எரிபொருள் வர்த்தகத்தில் இணையப் போகின்றன. உலக சந்தையில் கச்சா எண்ணெய்யின் விலை அதிகரிப்பு காரணமாக இலங்கையில் கடந்த வியாழன் நள்ளிரவு முதல் எரிபொருளின் விலையை அதிகரிக்க நேரிட்டதாகவும், இதனால் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது எனவும் , இனிவரும் காலங்களில் தேவையான எரிபொருள் கோரல்களை உரிய திட்டமிடலுடன் நடைமுறைப்படுத்துவதற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளமையினால், எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (ரெ-04)




## ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கலாநிதி யூ.எல்.ஏ. மஜீத் எழுதிய "LAW OF ACTIONS"நூல் அறிமுகம்




(நூருல் ஹுதா உமர்)

கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில், ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கலாநிதி யூ.எல்.ஏ. மஜீத் எழுதிய "LAW OF ACTIONS" என்ற நூலின் அறிமுகமும், இலங்கை உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம். திலீப் நவாஸ் மற்றும் வகுப் நியாய சபையின் தலைவரும் ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதியுமான கலாநிதி யூ.எல்.ஏ. மஜீத் ஆகியோரைக் கௌரவிக்கும் நிகழ்வும் சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் நேற்று இடம்பெற்றன.

கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி எம்.ஐ.றைசுல் ஹாதி தலைமையில் நீதிபதிகள், மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள், தொழில் நியாய சபை நீதிபதிகள், சிரேஷ்ட, கனிஷ்ட சட்டத்தரணிகள், கல்வியியலாளர்கள், பள்ளிவாசல்களின் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் ரமீஸ் அபூபக்கர் மற்றும் சமூகத்தின் முக்கிய பிரமுகர்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் தலைவர் பொறியியலாளர் அல்ஹாஜ் ஏ. ஹிபத்துல் கரீம் பொன்னாடை போர்த்தி நீதிபதிகளைக் கௌரவித்தார்.

## 157ஆவது பொலிஸ் தின நிகழ்வு திருக்கோவிலில் களைகட்டியது



(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கையின் 157ஆவது பொலிஸ் தினத்தை முன்னிட்டு திருக்கோவில் பொலிஸ் நிலையம் ஏற்பாடு செய்த பாரிய அளவிலான நிகழ்வு நடைபெற்றது.

திருக்கோவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.பத்மகுமார தலைமையில் நேற்று நடைபெற்ற இந்த நிகழ்வில், அம்பாறை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜி.ஜெயபத்ம பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

முன்னதாக, திருக்கோவில் பொலிஸ் நிலையத்தில் இருந்து கலாசார பாரம்பரிய ஊர்வலத்துடன் திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்திற்கு பூசைப் பொருட்கள் கொண்டு செல்லப்பட்டன. ஆலயத்தில் விசேட பூசை நிகழ்வுகளை ஆலய குரு சிவஸ்ரீ கேயூரநாத சர்மா நடாத்தினார்.

உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் கே.தேசப்பிரிய, திருக்கோவில் பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள், விநாயகபுரம் வலம்புரி அமைப்பினர், அறநெறி மாணவர்கள், நலன் விரும்பிகள் மற்றும் பொலிஸாது குடும்பத்தினர் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

அறநெறிப் பாடசாலை மாணவிகளின் நடன நிகழ்வும் அங்கு இடம்பெற்றது.

# யாழ் போதனா வைத்தியசாலையின் கவனயீனம் 8 வயதுச் சிறுமியின் கை அகற்றப்பட்ட அவலம்!

## பலதரப்பு விசாரணைகள் ஆரம்பமாகின








மருத்துவத் தாதியின் செயற்பாடு காரணமாக 8 வயதுச் சிறுமியின் இடது கை, மணிக்கட்டின் கீழ் அகற்றப்பட்டுள்ள நிலையில் சிறுமி தொடர்ந்தும் வைத்திய சாலையில் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ்.போதனா வைத்தியசாலையில் நடைபெற்ற இந்தச் சம்பவம் மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் அச்சத்தையும் ஒருங்கே ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் மல்லாகம் பகுதியைச் சேர்ந்த யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் தரம் 3 இல் கல்வி கற்கும் 8 வயதுச் சிறுமி, காய்ச்சல் காரணமாக கடந்த 25 ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலை நோயாளர் விடுதியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

சிகிச்சையின் போது மறுநாள் 26 ஆம் திகதி, சிறுமியின் கையில் "கனுலா" (குளுக்கோஸ், மருந்துகள் ஏற்றுவதற்காக மணிக்கட்டின் கீழ் பொருத்தப்படும் ஊசி) பொருத்தப்பட்டு, நோய் எதிர்ப்பு மருந்து (அன்டிபயோடிக்) ஏற்றப்பட்டுள்ளது.

"கனுலா" உரிய வகையில் சிறுமியின் கையில் பொருத்தப்படாததால், சிறுமிக்கு வலி ஏற்பட்டுள்ளது. அது தொடர்பாகச் சிறுமி கூறிய போதிலும் தாதியர்கள், ஊசி ஏற்றினால் வலிக்கும் எனக் கூறி அதுபற்றிக் கவனம் செலுத்தவில்லை.

அந்த நிலையில் சிறுமியின் இரத்த நாளங்களில் பாதிப்பு ஏற்பட்டு, கையின் மணிக் கட்டின் கீழான பகுதி செயலிழந்துள்ளது. அதனால் சிறுமியின் கையை மணிக்கட்டுடன் அகற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டதை அடுத்து, சிறுமியின் கைப் பகுதி அகற்றப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் மன வருத்தம்**

இது தொடர்பாக யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பளார் த. சத்தியமூர்த்தி தெரிவிக்கையில்,

சிறுமியின் கை அகற்றப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் உடனடி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவத்தால் நான் மிக மனம் வருந்துகிறேன். இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாதவாறு நடவடிக்கைகளை எடுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாகச் சுகாதார அமைச்சுக்கு தொலைபேசி ஊடாகவும், எழுத்து மூலமாகவும் அறிவித்துள்ளேன். சுகாதார அமைச்சும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளது என்றார்.

**விசாரணைக் குழுக்கள் அமைப்பு**

இந்தச் சம்பவம் தொடர்பாக வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸின் உத்தரவின் கீழ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. விசாரணைகளின் அடிப்படையில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என ஆளுநர் அலுவலக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ்.போதனா வைத்தியசாலையில் இரு வைத்தியர்கள் தலைமையில் விசாரணைக் குழுவொன்று அமைக்கப்பட்டு, விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

**பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு**

தமது பிள்ளையின் கை அகற்றப்பட்டமை தொடர்பாக உரிய விசாரணைகளை முன்னெடுத்து, சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என சிறுமியின் பெற்றோரால் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸாரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (01)




# போலிப் பிக்குமார்களைக் கொண்டு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கும் ரகசியத் திட்டம் அம்பலமாகியுள்ளதாம்

## பின்னணியில் அரசியல் கட்சியொன்று உள்ளதாக தகவல்

பதினெட்டு முதல் இருபது வயது வரையிலான இளைஞர்களுக்குப் பயிற்சியளித்து, பிக்குமார்களுக்கான காவிச் சீருடைகளை வழங்கி, அவர்களை அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தும் ரகசிய செயற்பாடொன்று குறித்துத் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அரச புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளதாக தென்னிலங்கைப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இவ்வாறு பயிற்றுவிக்கப்பட்டவர்கள் ஆர்ப்பாட்டங்களின் போது முன்வரிசைகளில் பயன்படுத்தப்படுவதாகவும், இவர்கள் சீருடை தரித்த பௌத்த பிக்குகளாக காட்டப்படுவதாகவும் புலனாய்வுப் பிரிவினர் இரகசிய அறிக்கை ஒன்றின் மூலம் அரசாங்கத்திற்குத் தகவல் வழங்கியுள்ளதாகத் தெரியவந்துள்ளதாகவும் அப்பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையின் பின்னணியில் குறிப்பிட்ட அரசியல் கட்சியொன்று செயற்படுவதைப் புலனாய்வுப் பிரிவினர் கண்டு பிடித்துள்ளதாகவும், இவர்களில் 100 பேர் வரையில் அரசியல் கருத்துக்களைப் பரப்பும் செயற்பாட்டாளர்களாக பயன்படுத்த திட்டமிடப் பட்டுள்ளதாகவும், அது தொடர்பாக உரிய பிரிவினர் கவனம் செலுத்த வேண்டும் எனவும் புலனாய்வுத் துறை மூலம் அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் அப்பத்திரிகையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ரே-06)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறுசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.09.2023இல் வெளியிடப்பெற்றது.